# இலங்கை வங்கி

தீவளாவிய வலுவான கிளை வலையமைப்பையும் இலண்டனில் உள்ள துணை நிறுவனம் உட்பட பரந்தகன்ற வெளிநாட்டு வங்கி வலையமைப்பையும் கொண்டுள்ளதும் உலகளாவிய அதிசிறந்த 1000 வங்கிகளுள் ஒன்றாகவும் இலங்கையின் 1ம் தர வங்கியாகவும் தரப்படுத்தப்பட்டுள்ளதுமான இலங்கை வங்கி பின்வரும் பதவிக்குப் பொருத்தமான தகைமைகளும் அனுபவமும் கொண்ட நபர்களிடமிருந்து விண்ணப்பங்களைக் கோருகின்றனது.

## நிர்வாகி - தரவு மையச் செயற்பாடுகள் (Administrator - Data Centre Operatons)

### தகுதிப் பிரமாணங்கள்

- **இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்**
- **தகைமைகளும் அனுபவமும்**
  - இலங்கைப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட உள்நாட்டு அல்லது வெளிநாட்டுப் பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து கணனி விஞ்ஞானம் அல்லது தகவற் தொழில் நுட்பம் அல்லது தகவல் மற்றும் தொடர்பாடல் அல்லது மென் பொருட் பொறியியல் துறையில் இளமாணிப் பட்டம் பெற்றிருத்தல்
  - தகவற் தொழில்நுட்ப தரவு மையச் செயற்பாடுகளில் பட்டப் பின் அனுபவத்தைக் கொண்டிருப்பது கூடுதல் நன்மையாகும்
  - அடிப்படை ITIL அல்லது MCSA, RHCSA, IBM, AS/400 சான்றழிக்கப்பட்ட கணனி அமைப்பு நிர்வாகி, CCNA போன்ற வேறு ஏதேனும் கணனி அமைப்பு நிர்வாகத் தகைமைகளைக் கொண்டிருப்பதும் கூடுதல் நன்மையாகும்.

  ➢ **ஏனைய பண்புகள்**
  - தன் முனைப்பும் சேவை மனப்பாங்கும் வாய்க்கப் பெற்றிருத்தல்
  - பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் திறன்களுடன் புத்தாக்கச் செயற்பாடுகளில் ஈடுபாடு கொண்டிருத்தல்
  - நேர்மறையான மனப்பாங்குடன் வங்கியின் இலக்குகளை அடையும் முனைப்பும் அர்ப்பணிப்பும் கொண்டிருத்தல்
  - அழுத்தங்களுக்கு மத்தியிலும் திறம்படப் பணியாற்றும் ஆற்றல்
- **வயது**

  விண்ணப்ப முடிவுத் திகதியில் வயது 30 அல்லது அதற்கு குறைவாக இருத்தல் வேண்டும்.

### விதிகளும் நிபந்தனைகளும்

➢ இப்பதவி வழமையான வங்கிச் சேவைக்கு புறம்பானதெனினும் (மூடிய சேவை) வங்கியின் பொது விதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் உட்பட்டதாகும்.

➢ விண்ணப்பதாரி வங்கி திருப்தியடையும் வகையில் ஓராண்டு தகுதிகாண்கால தேவைகளைப் பூர்த்தி செய்யுமிடத்து "தரவு மையச் செயற்பாடுகள் நிர்வாகி" என்ற பதவியில் நிரந்தரமாக்கப்படுவார்.

➢ இப்பதவிக்கான சம்பள அளவுத்திட்டம்:

ரூ. 90,645/- ரூ. 115,045/-
ரூ. 1,220x20

(அனைத்தும் உள்ளடங்கலாக மாறும் வாழ்க்கைச் செலவுப் படியுடன் மாதாந்த மொத்தச் சம்பளம் ஏறத்தாழ ரூ. 188,000 ஆகும்)

➢ வேலை சுழற்சி அடிப்படையில் மற்றும் வார இறுதி/விடுமுறை நாட்களிலும் கடமை நேரத்துக்குப் பின்பும் வேலை செய்யக் கூடியவராக இருத்தல் வேண்டும்.

### தெரிவு நடைமுறை

➢ விண்ணப்பதாரிகள் நுண்ணறிவுப் பரீட்சை மற்றும் அதைத் தொடர்ந்து நடைபெறும் நேர்முகத் தேர்வு என்பவற்றின் மூலம் தெரிவு செய்யப்படுவர்.

➢ போட்டிப் பரீட்சையில் பெற்றுக் கொள்ளப்படும் புள்ளிகள் நேர்முகத் தேர்வுக்குத் தகுதி பெறும் விண்ணப்பதாரிகளைப் பட்டியலிடவே பயன்படுத்தப்படும்.

➢ நேர்முகத் தேர்வில் பெற்றுக் கொள்ளும் புள்ளிகளுக்கு அமையவே இறுதித் தெரிவுகள் மேற்கொள்ளப்படும்.

### விண்ணப்பிக்கும் முறை

www.boc.lk என்ற எமது இணையதளத்தின் Careers என்ற பகுதியின் கீழ் தரவிறக்கிக்கொள்ளக்கூடிய மாதிரி விண்ணப்பப்படிவத்தைப் பயன்படுத்தி உங்களது சுயவிபரக் கோவையினைத் தயாரித்து அதனை பிறப்புச் சான்றிதழ், தேசிய அடையாள அட்டை, தொடர்புடைய கல்வித் தகைமைச் சான்றிதழ்கள் என்பவற்றின் நிழற்பிரதியுடன் இணைத்து **16 நம்பர் 2024 திகதியில் அல்லது அதற்கு முன்னர்** கிடைக்கும் வகையில் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்குப் பதிவுத் தபாலில் அனுப்பவும்.

விண்ணப்ப முடிவுத் திகதிக்குள் மேற்குறிப்பிட்ட தகைமைகளைக் கொண்டிராத அல்லது தேவையான சான்றிதழ்களின் பிரதிகளை இணைத்து அனுப்பப்படாத அல்லது தவறான தகவல்களைக் கொண்ட அல்லது விண்ணப்ப முடிவுத் திகதிக்குப் பின்பு கிடைக்கும் எந்தவொரு விண்ணப்பமும் ஆட்சேர்ப்பின் எந்தவொரு கட்டத்திலும் மேலதிக அறிவித்தலின்றி நிராகரிக்கப்படும்.

**பிரதான முகாமையாளர் (ஆட்சேர்ப்பும் தொழில் அபிவிருத்தியும்)**
**இலங்கை வங்கி**
**26ஆவது மாடி, தலைமை அலுவலகம்,**
**'இலங்கை வங்கிச் சதுக்கம்',**
**இல. 01, இலங்கை வங்க மாவத்தை, கொழும்பு 01.**

- தேர்வு சம்பந்தமான ஆதரவுகளை நாடுவோர் தகைமையை இழப்பர்.
- தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரிகளை மட்டும் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கும் உரிமை வங்கிக்கு உண்டு.
- நிரப்பப்படவுள்ள பதவிகளின் எண்ணிக்கை தொடர்பில் தீர்மானிக்கும் அல்லது ஆட்சேர்ப்பை பிற்போடும்/ இரத்துச் செய்யும் உரிமை வங்கிக்கு உண்டு.
- வங்கியானது அதன் தனி நபர் தரவுப் பாதுகாப்புக் கொள்கைக்கு இணங்க உங்கள் தகவல்களின் தனியுரிமையையும் இரகசியத் தன்மையையும் பாதுகாக்கிறது.